FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364104

1. District : மாவட்டம் ஈரோடு
PS: கா.நி.க பிரிவு, காவல்நிலையம் ஈரோடு
Year: 2026 ஆண்டு
FIR No.: 06/PC/2026 முத.அ. எண்
Date: 07.08.2026 நாள் 06.30

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: 1988 as amended by the PC Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from நாள் முதல் : 28.07.2026
Date to நாள் வரை : 05.08.2026

Time Period : நேர அளவு
Time from நேரம் முதல் :
Time to நேரம் வரை :

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.08.2026
Time நேரம் : 06.00

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD-VOL II 07.08.2026
Time நேரம் : 06.00

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலமாக (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது).

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தாளவாடி சுமார் 158 கி.மீ. தெற்கே

Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. B. ரஜ
(b) Father's/ Husband's Name : தந்தை / ~~கணவர்~~ பெயர் பசுவண்ணர

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1987
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் லாரி ஓட்டுனர்
(g) Address : முகவரி 43/1, மல்லன்குழி, அகன்வாடி, தாளவாடி வட்டம், ஈரோடு மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. சதிஷ்குமார், கிராம நிர்வாக அலுவலர்,
2. திருமதி. மம்தா, கிராம உதவியாளர்,
மல்லன்குழி கிராமம், தாளவாடி வட்டம், ஈரோடு மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

B.Raju 7/8/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S. Suti 07/08/2026
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 07.08.2026 07.15 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. சாந்தி
Rank: நிலை தலைமை காவலர் எண் [illegible]
[illegible] பாரை,
சேலம்.

Attachment to Column 12 of FIR in Erode V&AC Cr.No 06/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC (amendment) Act, 2018.

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் K.சாந்தி ஆகிய நான் 07.08.2026 தேதி காலை 06.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது திரு.B.ரகு, த/பெ பசுவண்ணா, கதவு எண் 43/71, மல்லன்குழி, அருள்வாடி, தாளவாடி வட்டம், ஈரோடு மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டிருந்த ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புதல் B.ரகு, த/பெ பசுவண்ணா, கதவு எண் 43/71, மல்லன்குழி, அருள்வாடி, தாளவாடி வட்டம், ஈரோடு மாவட்டம். பெறுதல் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கருங்கல்பாளையம், ஈரோடு. அம்மா, நான் மேற்கண்ட முகவரியில் என்னுடைய குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். சொந்தமாக லாரி வைத்து தொழில் செய்துவருகிறேன். எங்கள் ஊரை சேர்ந்த வீரப்பா என்பவரின் மகன்களான சிவப்பா, லிங்கப்பா, வீரண்ணா மற்றும் பசுவண்ணா ஆகியோர்களிடமிருந்து தாளவாடி வட்டம், அருளவாடி கிராமம் சர்வே எண் 320/3A1A பட்டா எண் 614ன்படி 4060 சதுரடி இடத்தை தாளவாடி சார்பதிவக ஆவண எண் 105/2007 நாள் 29.01.2007ன்படி எனது அப்பா பசுவண்ணா பெயரில் கிரையம் பெற்றோம். அதில் தற்போது வீடு கட்டி குடியிருக்கிறோம். மேற்படி இடமானது எனது அப்பா பெயரில் பட்டா மாறுதல் செய்யப்படாமல் இருந்தது. எனவே அந்த நிலத்தை எனது அப்பா பசுவண்ணா பெயரை கூட்டுப்பட்டாவில் சேர்த்துவிடலாம் என்று முடிவு செய்தோம். ஏற்கனவே எனது அம்மா பெயரில் கொடுத்திருந்த ஒரு பட்டா மாறுதல் உத்தரவை வாங்க, தாளவாடி பேருந்து நிலையத்தில் வைத்து மல்லன்குழி கிராம நிர்வாக அலுவலகத்தில் வி.ஏ.ஓ அசிஸ்டென்ட் ஆக வேலை செய்யும் மம்தா என்பவரை 16.07.2026ம் தேதி மாலை சந்தித்தேன். அவரிடம் விபரம் சொன்னபோது, அவர் எனது அப்பாவின் ஆதார்கார்டு, நிலத்தின் பத்திரம் ஆகியவற்றின் ஜெராக்ஸ் நகல்களை கேட்டார். நான் அப்போதே அவரிடம் மேற்படி ஆவணங்களின் நகல்களை கொடுத்தேன். அவர் அதனை வாங்கிக்கொண்டு, தானே ஆன்லைனில் விண்ணப்பித்துக்கொள்வதாகவும், கம்ப்யூட்டர் சென்டர்காரர் போன் செய்தால் அப்ளிகேசன் சார்ஜை கொடுத்துவிடுங்கள் என்றும், பின்னர் பேசுகிறேன் என்று சொன்னார். அதன்பின்பு 27.07.2026ம் தேதி மாலை சுமார் 6.45 மணிக்கு நான் மம்தாவுக்கு போன் செய்து கேட்டபோது, அவர் 25.07.2026ம் தேதி அப்ளை செய்துவிட்டதாகவும், மனோஜ் என்ற கம்பியூட்டர் சென்டர்காரரின் போன் நம்பர் 8940942433 ஐ வாட்ஸ்அப்பில் அனுப்பி அதற்கு ரூ.100/- அனுப்பிவிடுமாறு சொன்னார். நான் அந்த நம்பருக்கு கூகுள் பே மூலம் ரூ.100/- அனுப்பிவிட்டு அந்த ஸ்கிரீன் சாட்டை மம்தாவுக்கு அனுப்பிவிட்டேன். ஆனால் 25.07.2026 அன்று எனது அப்பா பசுவண்ணா பெயரில் ஆன்லைனில் அப்ளை செய்த மெசேஜ் எதுவும் எனக்கு வரவில்லை. அதன்பிறகு 28.07.2026 ம் தேதி நான் மம்தாவுவிடம் என்ன ஆச்சு என்று வாய்ஸ் மெசேஜில் கேட்டேன். அதற்கு அவர் பட்டா மாறுதலுக்கு 6 ரெடிபண்ணிக்கொள்ளுமாறும், எல்லாம் சார்கிட்ட

பேசிக்கங்க, இது எல்லாரும் பன்றதுதான், இதுதான் ரெகுலர் என்று ரிப்ளை மெசேஜ் போட்டார். 29.07.2026ம் தேதி மாலை சுமார் 6.45 மணியளவில் மம்தாவுக்கு போன் செய்து உங்கள் மெசேஜில் 6 என்று போட்டிருந்தது புரியவில்லை என்று கேட்டபோது, அது ரூபாய் 6000 தான், நீங்கள் வி.ஏ.ஓ சாரிடமே பேசிக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார். நான் 30.07.2026ம் காலை சுமார் 10.30 மணிக்கு தேதி வாட்ஸ் அப்பில் வி.ஏ.ஓ அவர்களின் நம்பர் கேட்டு மெசேஜ் போட்டேன். அவர் வி.ஏ.ஓ நம்பர் 9095332230 என்று அனுப்பினார். நான் வி.ஏ.ஓ சதீஷ்குமார் அவர்களுக்கு அன்றையதினம் மதியம் சுமார் 2.40 மணியளவில் போன் செய்து எனது அப்ளிகேசன் குறித்து கேட்டேன். அவர் மம்தா உங்களது அப்ளிகேசன் போட்ட விபரம் பற்றி எதுவும் சொல்லவில்லை என்றார். நான் எனது அப்ளிகேசன் விபரத்தை சொன்னேன். அதற்கு அவர் சரி நான் உங்க பத்திரத்தை பார்த்துவிட்டு சொல்கிறேன் என்று சொல்லிவிட்டார். இது சம்மந்தமாக அவ்வப்போது நான் மம்தாவிடமும் கேட்டுவந்தேன். அவர் வி.ஏ.ஓ சாரை நேரில் பார்த்து கேட்டுக்கொள்ள சொல்லிவிட்டார். 04.08.2026 அன்று காலை சுமார் 09.50 மணிக்கு வி.ஏ.ஓ சதீஷ்குமாருக்கு போன்செய்தபோது அவர் கோர்ட்டில் இருப்பதாகவும் பின்னர் பேசும்படியும் சொன்னார். மம்தாவை நான் அன்றையதினம் மதியம் வழியில் சந்தித்தபோது சார் எதாவது சொன்னாரா என்று கேட்டேன். அவர் நான் சொன்னா நம்ப மாட்டிங்க, இந்தமாதிரி அலைய விட்டாதான் சரியா இருக்கும், நீங்க 6000க்கு சரியென்று சொன்னால் நான் சார்கிட்ட பேசி ஆர்டர்காப்பி வாங்கி தருகிறேன் என்று சொன்னார். 05.08.2026ம் தேதி தாளவாடி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வி.ஏ.ஓ சென்றிருப்பதாக தெரிந்துகொண்டு, நான் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மாலை சுமார் 4.45 மணியளவில் நேரில் சென்று வி.ஏ.ஓ சதீஷ்குமார் அவர்களை சந்தித்தேன். அப்போது அவரிடம் எனது அப்பாவின் பட்டா மாறுதல் குறித்து கேட்டுவிட்டு, மம்தா ரூ.6000 கேட்டுள்ளார் என்று கேட்டேன். நீங்கள் விருப்பப்படி கொடுத்துவிடுங்கள், நான் மொத்த வேலையையும் முடித்துவிட்டு கூப்பிடுகிறேன் என்றும், இப்போ அமௌண்ட் எடுத்துக்கொண்டு வந்துவிடுறீங்களா என்று கேட்டார். நான் தற்போது பணம் இல்லை என்றும், நாளைக்கு அல்லது நாளான்னைக்கு வருகிறேன் என்றும் சொன்னேன். அவர் சரி என்றும், உங்கள் விருப்பம்தான் ஆனால் பணம் ரூ.6000 வரவில்லை என்றால் அப்ளிகேசன் தன்னுடனே நின்றுவிடும் என்றும் சொல்லிவிட்டார். எனது அப்பாவின் பெயரை கூட்டுப்பட்டாவில் சேர்க்க மல்லன்குழி வி.ஏ.ஓ சதீஷ்குமார் மற்றும் வி.ஏ.ஓ அசிஸ்டென்ட் மம்தா ஆகியோருக்கு லஞ்சமாக பணம் ரூ.6000/- கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன். இப்படிக்கு (Sd xxxx) 7/8/2026 (B.ரகு)

Sir, Received the above said computer typed complaint on 07.06.2026 at 06.00 hrs, a confidential verification was conducted about the complaint through sources. The reliability and the antecedents of the complainant were found to be genuine and the accused reputation was found to be bad and already a case in Erode V&AC

Cr.No.01/AC/2022 has been registered against in the name of the accused Tr.Sathiskumar, VAO. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Erode Vigilance and Anti-Corruption Cr.No.06/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC (amendment) Act, 2018 today on 07.08.2026 at 06.30 hrs. Sd/- (xxxxxxxx) 07.08.2026 K.Shanthi, Deputy of Police, V&AC, Erode.

Original FIR along with the original complaint of Tr.B.Raghu, S/o Basuvanna, D.No.43/71, Mallankuzhi, Arulvadi, Thalavadi Taluk, Erode District is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Erode and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

07/08/2026

(K.Shanthi)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Erode.